மறைமலைநகர் நகராட்சியில் 30.12.2019 திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்:-

| பொருள் எண் | தீர்மான எண் | நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரம் |
|---|---|---|
| 1 | 1020 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 2 | 1021 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 3 | 1022 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 4 | 1023 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 5 | 1024 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 6 | 1025 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 7 | 1026 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 8 | 1027 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 9 | 1028 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 10 | 1029 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 11 | 1030 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 12 | 1031 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 13 | 1032 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 14 | 1033 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 15 | 1034 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 16 | 1035 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |

# மறைமலைநகர் நகராட்சி

மறைமலைநகர் நகராட்சியில் 30.12.2019 திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்:-

## பொருள் எண்.1

மறைமலைநகர் நகராட்சி – பொறியியல் பிரிவு செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களின் வெளியீட்டு ஆணை எண்.58/ ஒப்பந்தப்புள்ளி/விளம்பரம்/2019 நாள்.19.07.2019ல் விளம்பர மேலாளர் அட்வேவ் அட்வடைஸ்மென்ட் விளம்பர நிறுவனத்திற்கு அத்திவரதரை தரிசிக்க வரும் பக்தர்களுக்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் விடுக்கும் அன்பான வேண்டுகோள் விளம்பர அறிவிப்பு 20.07.2019 தேதியில் வெளியிடப்பட்டு விளம்பரம் செய்த வகையில் பட்டியல் தொகை வழங்க பட்டியல் வரப் பெற்றுள்ளது.

மேலும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ஏழாவது மாநில உயர் ஆற்றல் குழு பரிந்துரைக்கப்பட்ட 2 எண்ணிக்கையிலான நகராட்சி பொறியியல் பிரிவிற்கு தூர் வாரும் இயந்திரங்கள் வாங்கும் பணிக்கு விளம்பரம் செய்த வகையில் பட்டியல் தொகை வழங்க பட்டியல் வரப் பெற்றுள்ளது. எனவே மேற்கண்ட இரு விளம்பரங்களின் பட்டியல்கள் விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ்களின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | நமது புரட்சித் தலைவி அம்மா | ரூ.1,70,100 |
| 2 | தினமணி – சென்னை | ரூ.14,566 |

மேற்கண்ட இரு பட்டியல் தொகைகளை பணியின் அவசியம் கருதி அனுமதி பெற்று வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண்.4408 /2019/இ1</u>

**நகரமன்ற தீர்மான எண்.1020 நாள்.30.12.2019**
**அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.**

ஓம்/–வ.விஜயகுமாரி
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

# மறைமலைநகர் நகராட்சி

**மறைமலைநகர் நகராட்சியில் 30.12.2019 திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்:-**

**பொருள் எண்.2**

பொதுசுகாதாரப்பிரிவு இந்நகராட்சி வார்டு எண் **1** முதல் 21 வரையிலான பகுதிகளில் தற்போது பெய்துள்ள பருவ மழையால் **58.8**.ச.கி.மீட்டர் பரப்பளவு உள்ள அனைத்து காலிமனைகளிலும் தற்போது தண்ணீர் தேங்கியுள்ளது, அகலமான இருபக்க ரோடுகளிலும் செடி மற்றும் முள்கள் வளர்ந்துள்ள, தொழிற்சாலைப் பகுதிகளில் இரவு நேரங்களில் திடக்கழிவுகளை கொட்டி சென்று விடுகின்றனர். மேலும் குப்பை கொட்டும் இடத்தில் உள்ள இடப்பற்றாக்குறையால் ஏற்கனவே உள்ள கழிவுகளை சமன் செய்யவும், இப்பணியின் அவசரம், அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ளவும், இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு போதிய அவகாசம் இல்லாததால் இப்பணியினை உள்ளூர் விலைப்புள்ளி பெற்று தினசரி நாள் வாடகை, எரிபொருள், டிரைவர்படி உட்பட அனைத்தும் சேர்த்து ஒரு JCB இயந்திரம் மூலம் பணிகள் மேற்கொள்ளவும், இப்பணிக்கு **1** மணி நேரத்திற்கு வாடகை விகிதத்தில் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ளவும், இப்பணியினை மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.**4.50**/—லட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் விலைப்புள்ளி மூலம் கோரியதில் திருவாளர்.ஹரிடிரேடர்ஸ் என்பவர் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளார். எனவே இப்பணியினை திருவாளர்.ஹரிடிரேடர்ஸ் என்பவர் மூலம் மேற்கொள்ளவும் அனுமதிக்கும், இப்பணி தொடர்பான செலவினத்திற்கு மன்றப் பொருள் வைக்க தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் அனுமதிக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**
மன்றம் அனுமதி வழங்கலாம்

**ந.க.எண். 4846/2019/எச்.1**

**நகரமன்ற தீர்மான எண்.1021 நாள்.30.12.2019**
**அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.**

ஒம்/—வ.விஜயகுமாரி
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

# மறைமலைநகர் நகராட்சி

மறைமலைநகர் நகராட்சியில் 30.12.2019 திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்:-

## பொருள் எண்.3

பொதுசுகாதாரப்பிரிவு – இந்நகராட்சிப்பணிக்கு – திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு மற்றும் அது தொடர்பான மாற்றுப்பொருள் பயன்பாடுகள் தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக இப்பணிக்கு தேவையான ஸ்டிக்கர்கள் கீழ்கண்ட விபரப்படி தேவைப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1 | திடக்கழிவு பிரித்து வழங்குதல் தொடர்பான A4 அளவினை சுவற்றில் ஒட்டக்கூடிய ஸ்டிக்கர் | 20,000 எண்ணிக்கை |
| 2 | பிளாஸ்டிக் தடை மற்றும் மாற்றுப்பொருள் விழிப்புணர்வு ஸ்டிக்கர் A4 அளவினை சுவற்றில் ஒட்டக்கூடிய ஸ்டிக்கர் | 20,000 எண்ணிக்கை |

மேற்கண்ட ஸ்டிக்கர் அச்சிட்டு வாங்கிப் பயன்படுத்த தேவையான தோராய செலவினம் ரூ.3.00 லட்சம் மட்டும் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் இப்பணி தொடர்பான செலவினத்திற்கு மன்றப்பொருள் வைக்க தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் அனுமதிக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-
மன்றம் அனுமதி வழங்கலாம்

**ந.க.எண். 4860 /2019/எச்.1**

**நகரமன்ற தீர்மான எண்.1022 நாள்.30.12.2019**
**அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.**

ஒம்/—வ.விஜயகுமாரி
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

# மறைமலைநகர் நகராட்சி

**மறைமலைநகர் நகராட்சியில் 30.12.2019 திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்:-**

**பொருள் எண்.4**

பொதுசுகாதாரப்பிரிவு – இந்நகராட்சி– திடக்கழிவு மேலாண்மைப்பணிகள் இப்பணிக்கு தேவையான 5 எண்ணிக்கையிலான வாடகை டிராக்டர்களை திருவாளர்.வாலாஜாபாத் அக்ரோ இஞ்சினியரிங் அவர்கள் மேற்கொண்டு வருகின்றார். ஏற்கனவே இப்பணியினை செய்ய 3 மாதத்திற்கு மொத்தம் 90 நாட்கள் பணியினை செய்ய அனுமதி வழங்கப்பட்டது. இதன்படி சப்ளைதாரர் 77 நாட்கள் பணியினை செய்துள்ளார், எனவே இப்பணியின் அவசர அவசியம் கருதி மேலும் 3 மாதங்களுக்கு இப்பணியினை மேற்கொள்ளவும் இதற்குண்டான தோராய செலவினம் ரூ.10.50 லட்சம் மட்டும் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இப்பணி தொடர்பான செலவினத்திற்கு மன்றப்பொருள் வைக்க தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் அனுமதிக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதி வழங்கலாம்

**ந.க.எண். 3312/2019/எச்.1**

**நகரமன்ற தீர்மான எண்.1023 நாள்.30.12.2019**
**அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.**

ஒம்/–வ.விஜயகுமாரி
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

# மறைமலைநகர் நகராட்சி

**மறைமலைநகர் நகராட்சியில் 30.12.2019 திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்:-**

**பொருள் எண்.5**

பொதுசுகாதாரப்பிரிவு – இந்நகராட்சி பகுதியில் உள்ள வார்டு எண்.1 முதல் 21 வரையிலான சுமார் 58.08 ச.கி.மீட்டர் பரப்பளவு கொண்டதாகும். இங்கு சுமார் 1 லட்சம் மக்கள் தொகையினரும் மற்றும் 25000 எண்ணிக்கையிலான குடியிருப்புகள் மற்றும் சுமார் 700 எண்ணிக்கையிலான வர்த்தகநிறுவனங்களும் உள்ளன. இவற்றில் டெங்கு தடுப்பு பணியில் ஈடுபட தேவையான 82 DBC பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

டெங்கு பணிக்கு தேவையான முதிர்ந்த கொசுக்களை அழிப்பதற்கு தேவையான Vehicle Mounting Type Fogging Machine 3 எண்ணிக்கை Indoor Fogging Machine 10 எண்ணிக்கை உள்ளது. இதில் Pules Fog 2 எண்ணிக்கையில் தான் உள்ளது, இது போதுமானதாக இல்லை மேலும், இவற்றில் 1 இயந்திரம் அடிக்கடி பழுது ஏற்படுவதால் இப்புகை அடிக்கும் பணிகள் பாதிப்படைகின்றன.

எனவே இக்குறைபாட்டினை நிவர்த்தி செய்ய புதிய Pules Fog இயந்திரம் 2 எண்ணிக்கையில் வாங்கவும், இவ்வியந்திரம் வாங்க தேவையான தோராய செலவினம் ரூ.2.50 லட்சம் மட்டும் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் இப்பணி தொடர்பான செலவினத்திற்கு மன்றப்பொருள் வைக்க தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் அனுமதிக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண். 4857/2019/எச்.1

**நகரமன்ற தீர்மான எண்.1024 நாள்.30.12.2019**
**அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.**

ஓம்/–வ.விஜயகுமாரி
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

# மறைமலைநகர் நகராட்சி

மறைமலைநகர் நகராட்சியில் 30.12.2019 திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்:-

## பொருள் எண்.6

பொதுசுகாதாரப்பிரிவு – இந்நகராட்சி – டெங்கு தடுப்பு பணிக்கு தேவையான தண்ணீர் மருந்து அடிக்கும் இயந்திரம் தற்போது இங்கு போதிய அளவு இல்லை. இதனால் பல பகுதிகளில் தேங்கியுள்ள நீரில் மருந்து தெளிப்பதற்கும், கழிவு நீர் கால்வாய்களில் மருந்து அடிப்பதற்கும் சிரமமாக உள்ளது. மேலும் இப்பணியினை மேற்கொள்வதற்கு தற்போது புதிதாக வந்துள்ள புகை மருந்து மற்றும் தண்ணீர் மருந்து அடிக்கும் இயந்திரம் 2 எண்ணிக்கை, தண்ணீர் மருந்து அடிக்கும் இயந்திரம் 5 எண்ணிக்கை கீழ்கண்ட விபரப்படி தேவைப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1 | கொசு மருந்து அடிக்கும் கைவிசைப்பம்புடன் கூடிய தெளிப்பான் | 5 எண்ணிக்கை |
| 2. | புகை மருந்து மற்றும் தண்ணீர் மருந்து அடிக்கும் இயந்திரம் | 2 எண்ணிக்கை |

மேற்கண்ட வகையிலான இயந்திரங்களை வாங்கிப்பயன்படுத்த தேவையான தோராய செலவினம் ரூ.3.50 லட்சம் மட்டும் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் இப்பணி தொடர்பான செலவினத்திற்கு மன்றப்பொருள் வைக்க தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் அனுமதிக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம்

**ந.க.எண். 4793 /2019/எச்.1**

நகரமன்ற தீர்மான எண்.1025 நாள்.30.12.2019

அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

ஓம்/–வ.விஜயகுமாரி
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

# மறைமலைநகர் நகராட்சி

**மறைமலைநகர் நகராட்சியில் 30.12.2019 திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்:-**

**பொருள் எண்.7**

அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தின் கீழ் 2019–20ஆம் ஆண்டுக்கான இந்நகராட்சி 100 பயனாளிகள் தேர்வு செய்ய 250 விண்ணப்பங்கள் தகுதியான நபர்களிடமிருந்து பெற்று கணினியில் பதிவேற்றம் செய்து பட்டியல் தயாரித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வழங்கிட நகராட்சி பகுதிகளில் முகாம் நடத்திட மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் அவர்களின் கடித ந.க.எண்.011/2019/அ3 நாள்.27.12.2019ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அதற்கான அறிவிப்பினை பொது மக்களுக்கு தெரியப்படுத்திட ஆட்டோ மூலம் விளம்பரம் செய்திடவும் பேனர்கள் மற்றும் துண்டு பிரசுரங்கள் அச்சிடுதல் மற்றும் விண்ணப்ப படிவங்கள் அச்சிடுவதற்கு தோராய செலவினத் தொகை ரூ.2,50,000/– மட்டும் பொது நிதியிலிருந்து வழங்கிட மன்ற பொருள் ஆணையரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண். 200 /2019/அ1

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகரமன்ற தீர்மான எண்.1026 நாள்.30.12.2019**

**அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.**

ஓம்/–வ.விஜயகுமாரி
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

# மறைமலைநகர் நகராட்சி

மறைமலைநகர் நகராட்சியில் 30.12.2019 திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்:-

## பொருள் எண்.8

இந்நகராட்சி அலுவலகத்திற்கு 2019–20 ஆண்டிற்கு தேவையான எழுதுபொருட்கள் படிவங்கள், பதிவேடுகள் மற்றும் இரண்டு அம்மா உணவகத்திற்கு தேவையான பதிவேடுகள் மற்றும் பில் புத்தகங்கள் அங்கீகரிக்கப்பட்ட NAPCO Print வேலூர் நிறுவனத்திடமிருந்து அவசர அவசியம் கருதி இப்பொருட்கள் வாங்கி கொள்ள தோராய செலவினம் ரூ.9.50 இலட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றப் பொருள் வரைவு ஆணையரின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2985/2018/அ1

அலுவலகக்குறிப்பு:-
மன்றம் அனுமதிக்கலாம்.

நகரமன்ற தீர்மான எண்.1027 நாள்.30.12.2019
அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

ஒம்/–வ.விஜயகுமாரி
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

# மறைமலைநகர் நகராட்சி

**மறைமலைநகர் நகராட்சியில் 30.12.2019 திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்:-**

**பொருள் எண்.9**

செங்கல்பட்டு மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.1677/2017/அ1 நாள்.10.12.2019 மூலம் செங்கற்பட்டு மண்டல இயக்ககத்தின் கீழ் இயங்கி வரும் 18 நகராட்சிகளின் செயல்பாடுகள் குறித்து அனைத்து பொருட்கள் மீதான மாதாந்திர தொகுப்பு அறிக்கைகள் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் மற்றும் 4 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. மேலும், உயர் அலுவலகங்களிலிருந்து அவ்வப்போது கோரப்படும் அனைத்து பொருட்கள் மீது கடிதம் மூலம் அறிக்கைகள் பெறப்பட்டு, அவற்றை உடனுக்குடன் தொகுத்து சம்பந்தப்பட்ட உயர் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

இது போன்ற செயல்பாடுகளை மேற்கொள்ளவும், அறிக்கைகள் மற்றும் கடிதங்கள் தட்டச்சு செய்து பிரதிகள் எடுக்க, கணினி மற்றும் அது தொடர்புடைய தளவாடங்கள் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்திற்கு தேவைப்படுகிறது. மேலும், அவற்றை வாங்கவும் பராமரிக்கவும் போதிய நிதி ஒதுக்கீடு இவ்வாண்டு இல்லாத காரணத்தினால், உடனடியாக தேவைப்படும் கணினி மற்றும் அது தொடர்புடைய தளவாட சாமான்கள் கீழ்கண்டவாறு நகராட்சிகள் தற்காலிக அடிப்படையில் பெற்று பயன்பாடு முடிந்து மீள திரும்ப அந்தந்த நகராட்சிக்கு திருப்பி அனுப்பிடும் அடிப்படையில் (on returnable basis) 25.12.2019–க்குள் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நமது நகராட்சிக்கு 2 கணினிகள் மற்றும் 4 பிரிண்டர்கள் கோரி வழங்கிடுமாறு கடிதம் வரப்பெற்றுள்ளது. ஆகையால் இப்பணியின் அவசரம் அவசியம் கருதி மேற்கண்ட பொருட்களை உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பொருட்களை வாங்கி சப்ளை செய்யவும் அதற்கான தோராய செலவினம் ரூ.4.91 இலட்சம் ஆகும். எனவே இப்பணியின் அவசரம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதிப்பெற்று பொருட்களை வாங்கியதற்கும் மற்றும் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஜிசாப்ட் நிறுவனத்திற்கு தொகை வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண். 4851 /2019 /அ1

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

**நகரமன்ற தீர்மான எண்.1028 நாள்.30.12.2019**
**அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.**

ஓம்/–வ.விஜயகுமாரி
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

# மறைமலைநகர் நகராட்சி

மறைமலைநகர் நகராட்சியில் 30.12.2019 திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்:-

## பொருள் எண்.10

நகராட்சிகளின் ஆணையர், சென்னை –28 அவர்களின் கடித ந.க.எண்.3808/13/UPA2 நாள்.26.12.2019ன்படி மறைமலைநகர் நகராட்சிப் பகுதிகளில் உள்ள வீடற்றவர்களுக்கு தங்குமிடம் ஒன்று அமைக்க விரிவான திட்ட அறிக்கை (DPR) சமர்ப்பிக்க வேண்டி மறைமலைநகர் வார்டு எண்.7 நின்னக்கரை கிராமம் நில சர்வே எண்.360–ல் (பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையம் அருகில்) அமைக்க இடம் ஆய்வு செய்யப்பட்டு அதற்கான மதிப்பீடு தொகை ரூ.60.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், மேற்படி பணியினை (நகர்ப்புற வீடற்றவர்களுக்கு தங்குமிடம்) தேசிய நகர்ப்புற வாழ்வாதார பணித் திட்டத்தின் கீழ் (NULM) மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்க மன்றப் பொருள் வரைவு ஒப்புதலுக்கு.

<u>ந.க.எண். 1865 /2019 /இ1</u>

அலுவலகக்குறிப்பு:-
மன்றம் அனுமதிக்கலாம்.

நகரமன்ற தீர்மான எண்.1029 நாள்.30.12.2019
அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

ஓம்/–வ.விஜயகுமாரி
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

# மறைமலைநகர் நகராட்சி

**மறைமலைநகர் நகராட்சியில் 30.12.2019 திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்:-**

**பொருள் எண்.11**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 21 வரையிலான பகுதிகளில் உள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை இயக்குதல் பணிக்கு நிர்ணய ஊதிய அடிப்படையில் பணியாற்றி வந்த பணியாளர்கள் பணி நிரந்தரம் கோரி தொடுக்கப்பட்ட வழக்கில் நகராட்சியில் இனி எவ்விதமான பணியும் அப்பணியாளர்கள் மேற்கொள்ளக்கூடாது எனவும் அவர்களை பணியிலிருந்து நீக்கம் செய்யவும் வழங்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்பின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தற்போது அப்பணியாளர்கள் நீக்கம் செய்யப்பட்டதால் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் தடைபடாமல் இருக்க ஏதுவாக தனியார் ஒப்பந்தாரர் மூலம் வெளியாட்களை கொண்டு பணியை மேற்கொள்ள 8 பணியாளர்கள் வீதம் நவம்பர் மாதம் சப்ளை செய்து பணியை மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.98,000/–ற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அ.கு.</u>

மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

<u>ந.க.எண். 4808 /2019 / இ1</u>

நகரமன்ற தீர்மான எண்.1030 நாள்.30.12.2019
அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

ஒம்/–வ.விஜயகுமாரி
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

# மறைமலைநகர் நகராட்சி

**மறைமலைநகர் நகராட்சியில் 30.12.2019 திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்:-**

## பொருள் எண்.12

மறைமலைநகர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 2018–19ம் ஆண்டு பொது நிதியில் கீழ் வார்டு எண்.15 பேரமனூர் நவீன எரிவாயு தகன மேடைக்கு தேவையான விறகுகள் சப்ளை செய்தல், இயக்கம் மற்றும் ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் சப்ளை செய்தல் பணிக்கு ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் நகரமன்றத் தீர்மான எண்.558 நாள்.26.10.2018ன்படி நிறைவேற்றப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கடந்த 20.11.2018–ல் கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் 0.02% மதிப்பீட்டைவிட குறைவாக அளித்த திருவா.எம்.எச்.டி இன்ஜினியரிங் என்ற ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் வரும் 12.12.2019 அன்றுடன் பணி ஒப்பந்தகாலம் முடிவடைய உள்ளது. மேலும் தற்போது ஊராட்சிகளில் உள்ளாட்சி தேர்தல் நடைபெறவுள்ளதால் ஒப்பந்தப்புள்ளி புதிதாக கோரப்படும் பட்சத்தில் நாளிதழில் ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை செய்ய இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் இப்பணி அத்தியாவசிய பணி என்பதால் ஆணையரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்ததாரரின் பணிதிறனை கருத்திற்கொண்டு அதே ஒப்பந்ததாரருக்கு ஏற்கனவே உள்ள ஒப்பந்த விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி புதிதாக கோரப்படும்வரை பணி நீட்டிப்பு செய்து பணியினை மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

ஆணையரின் முன் அனுமதி பெற்று பணி நீட்டிப்பு செய்ய பணி உத்திரவு வழங்கியமையை மன்றம் அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண். 2330 /2019 / இ1</u>

**நகரமன்ற தீர்மான எண்.1031 நாள்.30.12.2019**
**அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.**

ஓம்/–வ.விஜயகுமாரி
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

# மறைமலைநகர் நகராட்சி

**மறைமலைநகர் நகராட்சியில் 30.12.2019 திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்:-**

## பொருள் எண்.13

மறைமலைநகர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 2018–19ம் ஆண்டு பொது நிதியில் கீழ் வார்டு எண்.8 கூடலூர் நவீன எரிவாயு தகன மேடைக்கு தேவையான விறகுகள் சப்ளை செய்தல் மற்றும் இயந்திரம் இயக்க ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் சப்ளை செய்தல் பணிக்கு ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் நகரமன்றத் தீர்மான எண்.584 நாள்.22.11.2018ன்படி நிறைவேற்றப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கடந்த 07.12.2018–ல் கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் 0.31% மதிப்பீட்டைவிட குறைவாக அளித்த திருவா.எம்.எச்.டி இன்ஜினியரிங் என்ற ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் வரும் 01.01.2020 அன்றுடன் பணி ஒப்பந்தகாலம் முடிவடைய உள்ளது. மேலும் தற்போது ஊராட்சிகளில் உள்ளாட்சி தேர்தல் நடைபெறவுள்ளதால் ஒப்பந்தப்புள்ளி புதிதாக கோரப்படும் பட்சத்தில் நாளிதழில் ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை செய்ய இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் இப்பணி அத்தியாவசிய பணி என்பதால் ஒப்பந்ததாரரின் பணிதிறனை கருத்திற்கொண்டு அதே ஒப்பந்ததாரருக்கு ஏற்கனவே உள்ள ஒப்பந்த விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி புதிதாக கோரப்படும்வரை பணி நீட்டிப்பு செய்து பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-
மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 2331 /2019 / இ1

**நகரமன்ற தீர்மான எண்.1032 நாள்.30.12.2019**
**அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.**

ஒம்/–வ.விஜயகுமாரி
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

# மறைமலைநகர் நகராட்சி

மறைமலைநகர் நகராட்சியில் 30.12.2019 திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்:-

## பொருள் எண்.14

மறைமலைநகர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 21 வரையிலான பகுதிகளில் உள்ள குடிநீர் மின்மோட்டர்கள் இயக்குதல் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் கடந்த 21.02.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த திரு.ஜே.உலகநாதன் அவர்களுக்கு 28.02.2019 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேலும், கடந்த ஏப்ரல் மாதம் நிலவிய குடிநீர் வறட்சி காரணமாக 32 கைப்பம்புகளும், 10 மினிபவர் பம்புகளும் அமைக்கப்பட்டு அதனை இயக்குவதற்கு கூடுதல் பணியாட்கள் சப்ளை செய்யப்பட்டு அதற்குண்டான தொகை வழங்கப்பட்டது. இந்நிலையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.9.80 இலட்சம் தற்போது முடிவுற்றதால் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்ததாரரின் பணிதிறனை கருத்திற்கொண்டு அதே ஒப்பந்ததாரருக்கு ஏற்கனவே உள்ள ஒப்பந்த விகிதத்தில் 2019–20 நிதியாண்டு மார்ச் 2020 வரை பணியினை நீட்டிப்பு செய்து அதற்குண்டான தோராய செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>ந.க.எண்.4915 /2019 /இ1</u>

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகரமன்ற தீர்மான எண்.1033 நாள்.30.12.2019**

**அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.**

ஓம்/–வ.விஜயகுமாரி
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

# மறைமலைநகர் நகராட்சி

**மறைமலைநகர் நகராட்சியில் 30.12.2019 திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்:-**

## பொருள் எண்.15

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 21 வரையிலான பகுதிகளில் UIDSSMT திட்டத்தின் கீழ் தற்போது குடிநீர் வீட்டிணைப்புகள் அனைத்து குடியிருப்புகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. அக்குடிநீர் இணைப்புகளுக்கான விவரங்களை உடனுக்குடன் கணினி மற்றும் பதிவேடுகளில் பதிவேற்றம் செய்து குடிநீர் வரி வசூல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டி அவசியம் ஆகிறது. இப்பணியினை மேற்கொள்ள போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் பணிகளை உடன் மேற்கொண்டு வரும் நிதியாண்டிற்கு குடிநீர் வரி வசூல் செய்ய ஏதுவாக மேற்படி பணிகளை மேற்கொள்ள இரண்டு கணினி இயக்குபவர்கள் மற்றும் இரண்டு எண்ணிக்கையிலான பிரிவு எழுத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் சப்ளை செய்ய ரூ.6.50 இலட்சம் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>ந.க.எண். 1089 /2019 /இ1</u>
<u>அலுவலகக்குறிப்பு:-</u>
மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகரமன்ற தீர்மான எண்.1034 நாள்.30.12.2019**
**அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.**

ஒம்/—வ.விஜயகுமாரி
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

**//உண்மை நகல்//**

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

# மறைமலைநகர் நகராட்சி

**மறைமலைநகர் நகராட்சியில் 30.12.2019 திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்:-**

## பொருள் எண்.16

இந்நகராட்சியில் புதியதாக உருவாக்கப்பட்டுள்ள வருவாய் பிரிவு, வரிவசூல் மையம் மற்றும் Server Roomகளுக்கு தேவையான கணினிகள் பொருத்துவதற்கு தேவையான UPS Line மற்றும் Internet மற்றும் VPN Connection கொடுப்பதற்கு தேவையான Networking உபகாரணங்கள் வாங்குவதற்கு ஆணையர் அவர்களின் அனுமதிக்கும் இதற்குண்டான தோராயின செலவினம் ரூ.4.87 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 4840 /2019 /அ1**

**நகரமன்ற தீர்மான எண்.1035 நாள்.30.12.2019**
**அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.**

ஓம்/—வ.விஜயகுமாரி
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி